**OPEN ACCESS**

Volume: 5

Issue: 1

Month: July

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 24.05.2020

Accepted: 27.06.2020

Published: 01.07.2020

Citation:
Ganesan, S. (2020). Neerkkundram Nadukal Inscription. *Shanlax International Journal of Tamil Research*, 5(1), 163–167.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i1.3413

*Corresponding Author:
tamilsganez@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Neerkkundram Nadukal Inscription

**Dr. S. Ganesan**

*Principal, Ramasamy Tamil College, Karaikudi, Tamil Nadu, India*

https://orcid.org/0000-0003-1267-4216

**Abstract -** Nadukal can be said to be the first charter to appear in the country. References for Nadukal Inscription can be found in Tolkappiyat and Sangam literature. The Nadukal show before our eyes the event of war, the glory of heroism, and the fact that people lived in times of struggle.

The human race, which lived two thousand years ago, was in a state of war. From prehistoric times to the 10th and 12th centuries AD, the term "war" was considered important. War and its by-products are responsible for the generosity and economic development of kings. It can be said that the Nadukal is taken in the memory of the hero. It is also known as the growth of inscription.

Devakottaivattam Kannankudi Union Near Urkunram. Nadukal dating to the 4th century AD and 16th to 17th century AD are found in this town. The purpose is to explore and explain these two.

**Key Words:** Tamil Nadu History, Nadukal, Tolkappiyam, Sangam Literature, Heroism, Inscription.

**References**

1. Durai.Pattabiraman, Tamil Kalvettu Kalil Puraporul Illakanam, Annamalai University, First Edition, 1990.
2. Ilampuranar, Tolkappiyam, (Porullathi Karam) , Kazhakaveliyidu, Chennai, Third Edition, 1969.
3. Somasundaranar, P.V., Purapporul Venpamalai, , Sixth Edition, 1974.

# நீர்க்குன்றம் நடுகல்,கல்வெட்டு

*முனைவர் சே. கணேசன்*
முதல்வர்(பொ), இராமசாமி தமிழ்க் கல்லூரி, காரைக்குடி.

***ஆய்வுச்சுருக்கம்:*** *நடுகல் என்பது நாட்டில் தோன்றிய முதல் சாசனம் என்று கூறலாம். தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் நடுகல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. நடுகற்கள் போர் நிகழ்வினையும், வீரத்தின் பெருமையும், மக்கள் போராட்டக் காலத்தில் வாழ்ந்தனர் என்பதையும் கண்முன்னே பதிவிட்டுக் காட்டுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனித இனம் போரிட்டே வாழவேண்டிய சூழ்நிலையில் இருந்தது. வரலாற்றிற்கு முற்பட்டகாலத்திலிருந்து கி.பி 10, 12-ம் நூற்றாண்டு வரை 'போர்சு என்பதே முக்கிய வரலாறாகக் கொள்ளப்பட்டது. மன்னர்களின் கொடைத் தன்மைக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் காரணம் போரும் அதன் வழி பெற்ற பொருள்களும் ஆகும். நடுகல் என்பது வீரனின் நினைவாக எடுக்கப்படும் கல் என்று கூறலாம். இதன் வளர்ச்சியே கல்வெட்டு என்றும் அறியமுடிகிறது. தேவகோட்டைவட்டம் கண்ணங்குடி ஒன்றியம் அருகேயுள்ள ஊர் நீர்க்குன்றம். இவ்வுரில் கி.பி 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தநடுகல், கி.பி 16, 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு காணப்படுகின்றது. இவ்விரண்டினையும் பற்றி ஆராய்ந்து விளக்குவதே நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்: தமிழக வரலாறு, நடுகல், தொல்காப்பியம், சங்க இலக்கியம், வீரம், கல்வெட்டு***

நடுகற்கள் சிறந்த செயல் செய்தார்க்கும் எடுக்கப்பட்டன. நடுகல் வழக்குக் கி.பி 12 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது என்கின்றனர் ஆய்வாளர்கள். "பெரும்பாலும் வீரர்களைப் புதைத்த இடத்தில் நடுகற்கள் எடுக்கப்பட்டன" என்கின்றனர் ஆய்வாளர்கள். போரில் இறந்த வீரனுக்கு அவனது ஊரின் கண் அல்லது போர்களத்தின் கண் நடுகல் நிறுவப்பட்டன. "வெட்சித் திணையை அடுத்தமைந்த பகுதியிலேயே தொல்காப்பியர் நடுகல் செய்தியைக் கூறியுள்ளார். இலக்கியங்களையும் தொல்காப்பிய இலக்கண அமைதியையும் நோக்குங்கால் நடுகல் என்பது நிரைகவர்தல் மற்றும் நிரைமீட்டலில் இறந்தார்க்கே முதற்கண் அமைந்திருந்தது என்று கருத இடந்தருகிறது. ஐயத்திற்கிடமின்றி வீரசோழிய ஆசிரியர் கரந்தைத் திணைக்குரியதாகவே நடுகல் முறைகளைச் சுட்டுகிறார்." (துரை. பட்டாபிராமன். தமிழ்க் கல்வெட்டில் புறப்பொருள் இலக்கணம், பக்கம்.78).

## நடுகல் வளர்ச்சி

பண்டைய காலங்களில் நிரைமீட்பதற்கும், நிரையைக் கவர்வதற்கும் செல்லும்போது வீரமரணம் அடைந்தவர்களுக்கு நடுகல் எடுக்கப்பட்டன. அதன் பின்னர் அடுத்தகட்ட வளர்ச்சியாக மண்ணுக்காகவும், மன்னர்களுக்காகவும் போர்க்களம் சென்று நீத்தார்க்குக் கல் நடுதல் வழக்கில் இருந்துள்ளன.

## நடுகல் - நிலைகள்

காத்தல் பொருட்டு எடுக்கப்பட்ட நடுகற்களை ஆறு நிலைகளில் வகைப்படுத்தலாம்.

1. விலங்குகளிடமிருந்து மக்களைக் காத்தல்
2. இயற்கை அழிவிலிருந்து மக்களைக் காத்தல்

3. மானங்காத்தல்
4. வாக்குக்காத்தல்
5. தலைவர்களைக் காத்தல்
6. பெண் காத்தல்

## நீர்க்குன்றம் நடுகல் அமைப்பு

நீர்க்குன்றம் நடுகல்லில் கல்லின் கண் நடப்பட்டவீரனின் உருவத்தைப் புடைச்சிற்பமாகப் பொறித்துள்ளனர். உருவ அமைதியைக் காட்டும்போது மறவனது போர்ச்செலவைக் கம்பீரமாகப் போர்க்குணம் விளங்குமாறும் கல்லில் பொறித்துள்ளனர். நடுகல்லில் வீரனின் உருவம் இயலபாக நின்றநிலையில் இல்லை. அவனது செயலுக்கேற்ப நிகழ்ச்சிக்கேற்ப உருவ அமைப்பு அமைந்துள்ளது. பெயரும் பீடும் குறிக்கப்படவில்லை. நீர்க்குன்றம் நடுகல் மேலே கூறப்பட்ட ஆறனுள் இயற்கை அழிவிலிருந்துமக்களைக் காத்தலின் பொருட்டு இவ்வீரன் மாண்டான் எனத் தெரிகிறது.

## தனியார் கொல்லை

நீர்க்குன்றம் என்னும் ஊரிலுள்ள கொல்லையில் நடுகல் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்நடுகல் தனிநபரின்கொல்லையில்கணடெடுக்கப்பட்டது. இவ்விடம் முன்பு போர்க்களமாகவோ அரசுபுறம் போக்கு இடமாகவோ இருக்கலாம். இக்கொல்லை நடுகல் வீரனது சொந்த உடைமையாகவோ அல்லது வீரத்தைப் பாராட்டி அளித்த நிலமாகவோ இருக்கலாம். தனிப்பட்டவரின் கொல்லையில் இருக்கும் இத்தகைய நடுகல் தனிப்பட்ட ஒருவனின் வீரத்தினைப் போற்றி நடப்பட்ட நடுகல் என்பதில் ஐயமில்லை. தனியார் கொல்லையின்கண் உள்ள நடுகற்களிலும் சில வேடியப்பன் கோயில் என்றே அழைக்கப்படுவதைக் காணலாம்.

தனியார் கொல்லையில் நடுகற்கள் காணப்பட்டால் செங்கம் பகுதிகளில் வேடியப்பன் கோயில் என்னும் பெயரில் இன்னும் அவ்வட்டாரமக்கள் முன்னோர் வழிபாடு செய்து வருகின்றனர். தேவகோட்டை பகுதியில் முதன்முதலில் கிடைத்த நடுகல் இதுவாதலால் இன்னும் பெயர் சுட்டடப்படாமல் கோயிலுக்கு அருகில் இந்நடுகல் நடப்பட்டுள்ளது.

நடுகல்லாக நின்ற வீரனுக்கு மாலை சுட்டி, கள்ளினைப் படைத்து வழிபட்டனர் என்பதைச் சங்க இலக்கியம் (அகநானூறு:35, புறநானூறு:232) பாடல்கள் எடுத்துரைக்கின்றன. மேலும் இந்நடுகல்லைச் சுற்றி வேல், அம்புகளை ஊன்றி வேலியிட்டு வழிப்பட்டன என்பதைப் பட்டினப்பாலை (78,79 பாடல்வரிகள்) வழி அறியலாம். புறநானூறு (335-ம் பாடல்) தெய்வத்தைச் சுட்டும்போது பகைவர்களைப் போரில் வென்று களிறெறிந்து வீழ்ந்தார்க் கெடுத்த கல்லைப் பரவுதலின்று வேறுகடவுள் இல்லையெனக் கூறுகிறார்.

## போர்க் கருவி

பெரும்பாலான நடுகற்களில் மறவன் போரில் பலவகையான கருவிகளைப் பயன்படுத்தி இருப்பான். ஆனால் இங்கு வீரனின் கைகளில் போர்க்கருவிகள் எதுவும் இல்லை. நின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ள நடுகல் வீரனின் வீரத்தை முகத்தில் காட்டியுள்ளனர்.

## காலின் அமைப்பு

மங்கலச் செயல் எனின் வலக்காலை முன் வைத்துச் செல்வதே பண்டையகால மரபாகும். இன்றளவும் வழக்கில் மரபும் இதுவேயாகும். ஆனால் “சாதலும் சிறப்பே” என்று எண்ணிப் போர்க்களத்திற்குப் புறப்படும் வீரர்கள் வலக்காலை முன்வைத்துப் புறப்படுவது இல்லை. இடக்காலை முன்வைத்தே சென்றுள்ளனர். படைப்பிரிவுகள் புறப்படும் போதும் இடக்காலை முன்வைத்தே செல்கின்றன. இவ்வழக்கினை அடியொற்றி நடுகல்லில் இடக்காலை முன்வைத்துச் செல்வதைப் போன்று நீர்க்குன்றம் நடுகல்லை அமைத்துள்ளனர்.

### கண்ணின் நோக்கு

"நிமிர்ந்தநன்னடை, நேர் கொண்ட பார்வையைக் கொண்டு திகழ்பவன் வீரன் ஆவான். உருவ அமைப்புகள் நேராகப் பார்த்த நிலையிலும், இடப்பக்கம் பார்த்த நிலையிலும், வலப்பக்கம் பார்த்த நிலையிலும் அமைக்கப்பெறும். இப்பார்வை அமைப்பானது பொறிப்பவரின் கைவாகுக்கேற்ப அமையும் என்கின்றனர். இருப்பினும் வலப்பக்கம் பார்த்தநிலையில் கல்லுருவங்கள் அருகியே இருக்கும் என்கின்றனர். நீர்க்குன்றம் கல்லின் பார்வை வலப்பக்கம் பார்த்த நிலையில் இருப்பது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

### மூக்கின் அமைப்பு

மூக்கு நீளமானதாக அமைக்கப்பட்டுள்ளது. இதனை "மூக்குக்கெண்டி" என்கின்றனர். இம்மூக்கின் அமைப்பைக் கொண்டு அஞ்சநேயர் கல் என்றும் அழைக்கப்படுகிறது.

### காதின் அமைப்பு

வீரனின் காதுகள் நீண்டுள்ளன. கி.பி 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விடு காது அழகியபெருமாள் என்னும் மன்னர் காலத்தைச் சார்ந்தவர்கள் வளர்த்த காதினைப் போன்று உள்ளது. மேலும் வீரனின் உருவம் ஆஞ்சநேயர் போன்றுஉள்ளதால் அக்கிராம மக்கள் ஆஞ்சநேயர் கல்லு என்று அழைத்துவருகின்றனர். இருப்பினும் ஊரைக் காத்து நின்ற வீரனுக்காக நடப்பட்ட நடுகல் தான் இது.

### கல்வெட்டு

நீர்க்குன்றம் என்ற இவ்வூரில் மக்கள் சிவன் கோயில் கட்ட நிலத்தேர்வு செய்யும் போது கல்லான பழமையான இலிங்கம், நந்தி சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச்சிற்ப அமைப்பைக்கொண்டு கி.பி 16, 17ஆம்நூற்றாண்டைச்சார்ந்தவைஎன்பதை அறியமுடிலாம். இச்சிலைகளைக் கொண்டு சிவன் கோயிலை அமைத்துத் திருக்குடமுழுக்கும் செய்துள்ளனர். இத்தகைய பணியின்போது கல்வெட்டின் இறுதிப் பகுதியாகத் திகழும் ஓம்படைக் கிளவியைக் கொண்டுள்ள கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஓம்படை என்பதற்குப் பாதுகாத்தல் என்பது பொருளாகும். கல்வெட்டில் கூறப்பட்டுள்ள அறத்தைக் காப்பவர்கள் எய்தும் நன்மை, தீமைகளை ஓம்படை எடுத்தியம்படுகின்றது. நீர்க்குன்றம் கல்வெட்டில் எவ்வகையான அறம் என்பது பற்றி அறியக்கூடிய கல்வெட்டு கிடைக்கவில்லை.

**"கங்கைக்கரையில்**
**காரம் பசுவை**
**கொன்ன"** ***(நீர்க்குன்றம் கல்வெட்டு)***

என்ற ஓம்படைக் கிளவி காணப்படுகிறது. இதன் பொருள் இத்தகைய அறத்தைச் சிதைப்பவர்கள் கங்கைக் ஆற்றங்கரையில் காரம் பசுவினைக் கொன்ற பாவத்திற்கு ஆட்படுவார்கள் என்கிறது. இச்செய்திக்குக் கீழே திருச்சூலக்குறி பொறிக்கப்பட்டுள்ளது. இதன்வழி இக்கல்வெட்டு சிவன் கோயிலுக்குரிய நிலக்கொடையைப் பற்றிய செய்தியினைக் கூற வந்த கல்வெட்டாகும்.

### தொகுப்புரை

1. நீர்க்குன்றம் நடுகல் கண்டெடுக்கப்பட்ட இடம் வீரனுக்கு உரியதாக இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது.
2. இப்பகுதியில் நடுகல் வழிபாடு வழக்கில் இருந்தன என்பதற்கு இந்த நடுகல் சான்றுபகர்கிறது.
3. இக்கல்வெட்டின் எழுத்தமைதியைக் கொண்டு கி.பி 16, 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதை உணரலாம்.
4. இத்தகைய காலகட்டத்தில் சிவன் கோயில் இருந்துள்ளது என்பதும் இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக நிலங்கள் இருந்துள்ளன என்பதும் சூலக்குறியின் வழி அறியப்படும் செய்தியாகும்.
5. மீதமுள்ள கல்வெட்டுகளும் தெரியவரின்

பல உண்மை வரலாறுகளை அறிய ஏதுவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**துணைநின்ற நூல்கள்**

1. தமிழ்க் கல்வெட்டுக்களில் புறப்பொருள் இலக்கணம், துரை. பட்டாபிராமன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு, 1990.
2. தொல்காப்பியம் (பொருளதிகாரம்), இளம்பூரணர் (உ.ஆ), கழகவெளியீடு, சென்னை, மூன்றாம் பதிப்பு, 1969.
3. புறப்பொருள் வெண்பாமாலை, பொ. வே. சோமசுந்தரனார் (உ.ஆ), ஆறாம் பதிப்பு, 1974.